2024 பிப்ரவரி 14]
20—

மாவட்ட கல்வி அலுவலகத்திற்குக் கட்டடம்

***53138—திரு. ஆர்.பி. உதயகுமார்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருமங்கலம் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கல்விக்கு முக்கியத்துவம்; தாய் மொழிக்கு முக்கியத்துவம்; தமிழ் மொழியில் கல்வி பயின்று இன்றைக்கு முதன்முறையாக ஒரு பழங்குடி இனத்தைச் சார்ந்திருக்கின்ற திருமதி ஸ்ரீபதி என்பவர் உரிமையியல் நீதிபதியாக தேர்வு பெற்றிருக்கிறார் (மேசையைத் தட்டும் ஒலி) என்று சொல்லும்போது அதற்கான அரசாணையாக தமிழ் மொழியில் படிப்பவர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை என்கின்ற அந்த அரசாணையை விதைத்தவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள்; வளர்த்தவர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள். மாண்புமிகு முதலமைச்சருடைய இந்த அரசாணை மூலமாக ஜவ்வாது மலையே இன்றைக்கு சமூக நீதி வாசம் வீசிக்கொண்டிருக்கின்றது என்பதை நான் பெருமையோடு எடுத்துச் சொல்வேன்.*

கட்டமைப்பு என்று வரும்பொழுது—முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு நூலகத்தை எழுப்பியதன்மூலம், அதில் தன்னுடைய இரு விழிகளையும் இழந்த சகோதரர் திரு. ஸ்ரீகாந்த் என்பவர் போட்டித் தேர்விலே பங்குபெற்று, இன்றைக்கு அவரும் தேர்வு செய்யப்பட்டு, ஒரு வங்கியினுடைய துணை மேலாளராக பணியாற்றுகிறார் என்கின்ற அந்தப் பெருமையும், எங்களுடைய திராவிட மாடல் அரசினுடைய நாயகர் நம்முடைய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு உரியது என்கின்றவகையில் தங்கள் அனுமதியோடு விடையளிக்கிறேன்.

[2024 பிப்ரவரி 14

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், திருமங்கலம் மாவட்ட கல்வி அலுவலகத்திற்கு, புதிய அலுவலகம் கட்டுவதற்கு உரிய இடத்தினை தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இடம் தேர்வு செய்யப்பட்டவுடன், கட்டடத்திற்கான செலவு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, விரைவில் கட்டடம் கட்டும் பணி தொடங்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.பி. உதயகுமார் அவர்கள், இருக்கையில் இல்லை.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம் அவர்கள்.

முற்பகல் 10–40

திரு. பெ. பெரியபுள்ளான் என்கிற செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருமங்கலம் தொகுதி, திருமங்கலத்திலுள்ள மாவட்ட கல்வி அலுவலகம், திருமங்கலம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் இயங்கி வருவதால், அங்கு புத்தகங்கள், சீருடைகள் போன்ற பொருட்களை வைப்பதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. அங்கே பணிபுரியும் அலுவலர்களுக்கும், பள்ளி மாணவர்களுக்கும் சிரமமாக இருப்பதால், உடனடியாக இடத்தைத் தேர்வு செய்து, புதிய மாவட்ட கல்வி அலுவலகக் கட்டடத்தைக் கட்டித் தருமாறு தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. அன்பில் மகேஸ் பொய்யாமொழி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் அவர்கள் சொன்னதுபோல், உடனடியாக அதற்கான இடம் பார்க்கின்ற வேலையில் நாங்கள் இறங்கியிருக்கின்றோம். கண்டிப்பாக, உடனடியாக நாங்கள் அதைக் கட்டித் தருவோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

2024 பிப்ரவரி 14]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி, மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள்.*

18—

சார்-பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம்

***38526—திரு. ஜெ. கருணாநிதி:**

மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் உள்ள சார்-பதிவாளர் அலுவலகத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. பி. மூர்த்தி, வணிக வரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் தனியார் கட்டடத்தின் முதல் மாடியில் இயங்கி வந்த மத்திய சென்னை பதிவு மாவட்டம், கோடம்பாக்கம் சார்-பதிவாளர் அலுவலகம், மாற்றுத் திறனாளிகள் வசதிக்காக, அவர்கள் எளிதில் வந்து செல்வதற்கு ஏதுவாக சார்-பதிவாளர் அலுவலகங்கள் இருக்க வேண்டுமென்ற மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின்படி, தற்போது ஜவஹர்லால் நேரு சாலை, 100 அடி ரோட்டிலுள்ள தனியார் வாடகைக் கட்டடத்தில் தரைதளத்தில் இயங்கி வருகிறது. கோடம்பாக்கம் சார்-பதிவாளர் அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு உரிய நிலத்தை தேர்வு செய்யும் பணி, எழும்பூர் மற்றும் அமைந்தகரை வட்டாட்சியர் ஆகியோரால் நடைபெற்று வருகிறது. நிலம் தேர்வு செய்யப்பட்ட பின், சொந்தக் கட்டடம் கட்டுவது குறித்து பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. கருணாநிதி அவர்கள்.*

திரு. ஜெ. கருணாநிதி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வடபழனி, அழகிரி நகர், 5-வது தெருவில் அமைந்துள்ள*